நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள் : 25.07.2023

## சாதாரணக்கூட்டம்

**ஸ்ரீ சோபகிருது வருடம் ஆடி மாதம் 9 ம் தேதி 2023ம் வருடம் ஜீலை மாதம் 25ம் தேதி (25.07.2023) செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவிருக்கிற அம்பாசமுத்திரம் நகர்மன்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்**

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
|---|---|---|---|
| **25.07.2023** | 471 | **பொருள் எண் : 1**<br>அரசாணை (நிலை) எண்.98 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.13.07.2023ன் படி நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு கீழ்காணும் விபரப்படி ஜீலை 2023 முதல் மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கிட ஆணையிடபட்டுள்ளது. அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>1. நகர்மன்ற தலைவர் - மதிப்பூதியம் ரூ.15000-<br>2. நகர்மன்ற துணைத்தலைவர் - மதிப்பூதியம் ரூ.10000-<br>3. நகர்மன்ற உறுப்பினர்கள் - மதிப்பூதியம் ரூ. 5000- | அனுமதி வழங்கப் படுகிறது |
| **25.07.2023** | 472 | **பொருள் எண் : 2**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி 5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.M.அழகம்மை அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br>1. முடப்பாலம் வடக்குகாலனி நடுத்தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | அனுமதி வழங்கப் படுகிறது |
| **25.07.2023** | 473 | **பொருள் எண் : 3**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி 14வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.சௌராபானு அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br>1. மருத்துவர்தெரு, சங்கரன்கோவில்ரோடு மற்றும் முகைதீன் பாத்திமா பள்ளி முதல் வாய்க்கால் வரை புதிய வாறுகால் அமைத்தல்<br>2. வண்ணாக்குடி தெருவில் கான்கிரிட் மூடியுடன் கூடிய புதிய வாறுகால் அமைத்தல்<br>3. பட்டாணியர் தெருவில் பள்ளிவாசல் எதிர்புறம் உள்ள கழிவுநீர் ஓடைக்கு கான்கிரிட் மூடி அமைத்து தர கேட்டல்.<br>4. சங்கரன்கோவில்ரோடு DKS குடோன் அருகில் தனிவாக உள்ள பாலத்தை பிரித்து மழைநீர் வடியும் வகையில் உயர்மட்டத்தில் அமைத்து தர கேட்டல்.<br>5. சங்கரன்கோவில்ரோடு DKS குடோன் எதிர்புறம் பேவர்பிளாக் சாலை அமைத்தல்.<br>6. சங்கரன்கோவில்ரோடு DKS குடோன் அருகில் சிறுமின்விசை குடிநீர்தொட்டி அமைத்தல். | அனுமதி வழங்கப் படுகிறது |
| **25.07.2023** | 474 | **பொருள் எண் : 4**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி 19வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.ஜோதிகலா அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br>1. ஊரம்மன் கோவில் முதல் விவசாய பண்ணை வரை வாறுகால் அமைத்து தர கேட்டல்.<br>2. ஊர்காடு 1.00LL - OHT எதிர்புறம் சுப்பிரமணியன் வீடு அருகில் உள்ள பாறையை உடைத்து நடைபாதை அமைத்து தர கேட்டல். | அனுமதி வழங்கப் படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| **25.07. 2023** | **475** | <u>**பொருள் எண் : 5**</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் தற்போது பதிவறை எழுத்தர் பணியிடத்தில் பணியாற்றிவரும் திருமதி கு.பத்மாவதி என்பவர் தூய்மை பணியாளராக திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பட்டியல் பெறப்பட்டு நேரடி நியமனம் மூலமாக இந்நகர்மன்ற நியமனக்குழு தீர்மான எண் 14 நாள் 6.10.2010 அன்று நியமனம் செய்யப்பட்டுள்ளார். அன்னார் பி.காம் பட்டதாரி என்பதாலும், அன்னார் அலுவலக நிர்வாக நலன் கருதி தற்காலிகமாக பதிவறை எழுத்தர் பணியிடத்தினை நன்கு கவனித்து வந்துள்ள நிலையிலும், ஏற்கனவே இந்நகராட்சியில் பதிவறை எழுத்தர் பணியிடமானது காலியாக இருந்து வந்த சூழ்நிலையிலும், தனியர் பதிவறை எழுத்தர் பணியிடத்திற்கு தகுதியானவர் என்பதனை கருத்திற்கொண்டும் பதிவறை எழுத்தராக இந்நகராட்சியின் நியமனக்குழு தீர்மான எண் 21 நாள் 18.08,2011-ன்படி பதிவறை எழுத்தராக பதவி உயர்வு செய்யப்பட்டு பணியாற்றிவருகின்றார். அன்னார் தூய்மை பணியாளர் பணியிடத்திலிருந்து தகுதிகாண் பருவம் முடிக்கப்படாமலேயே பதிவறை எழுத்தர் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிக்கப்பட்ட நிகழ்வு உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையில் ஆட்சேபணை எழுப்பப்பட்டு இவ்வாறு நியமனம் செய்யப்பட்டதற்கான குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, தகுதிகாண் பருவம் முடிக்கப்படாத ஒருவருக்கு பதவி உயர்வு அளிப்பது தொடர்பாக தமிழ்நாடு நகராட்சி பணிகள் 1970 பகுதி 2 விதி எண் 27 (b) சொல்லப்பட்டுள்ளதாவது......<br>**<u>27 Completion of probation and promotion</u>: (b) Subject to the provisions of clause(a). a member of a service in any class or category may be promoted from the said class or category even though he may not have completed his probation therein**.. என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அரசாணை(நிலை) எண் 897 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 25.4.1983-ன்படி தூய்மை பணியாளர்கள் அனைவரும் அடிப்படை பணியாளர்கள் என அரசு ஆணையிடப்பட்டுள்ளது.ஆகவே **தமிழ்நாடு நகராட்சி பணிகள் 1970 பார்ட் 3 சிறப்பு விதிகள் பிரிவு 1 வகுப்பு 10 கேட்டகரி 1-ன்படி அமையப்பட்ட பதிவறை எழுத்தர் பணியிடமானது By Direct recruitment or by recruitment by transfer from the Last Grade Service என வரையறுக்கப்பட்டுள்ளது**. மேற்படி அரசாணையின்படி துப்புரவு பணியாளர்கள் அனைவரும் அடிப்படை பணியாளர்கள்தான் என்பதால் துப்புரவு பணியாளர் பணியிடத்திலிருந்து திருமதி பத்மாவதி என்பவர் பதிவறை எழுத்தர் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு பதவி உயர்வு அளிக்கப்பட்ட நடைமுறையானது சரியானது என்பதாலும், தணிக்கை தடையினை நிவர்த்தி செய்யும் வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் பின்னேற்பு பெற்று சமர்ப்பிக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளபடியால், தனியருடைய எதிர்கால பணிநலன்கருதி தணிக்கை தடையினை நிவர்த்தி செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் பின்னேற்பு அனுமதியினை பெற்றிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 20 மன்ற உறுப்பினர் திரு. ம. வேலுச்சாமி எதிர்ப்பு பதிவு செய்தார். நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆலோசனை பெற கருத்துரு அனுப்பிட தீர்மானிக்கப்படுகிறது. |
| **25.07. 2023** | **476** | <u>**பொருள் எண் : 6**</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய கோடாரங்குளம் நீரேற்று நிலையத்தில் கீழ்காணும் விவரப்படியான மின் இணைப்புகள் உள்ளன.<br>1. மின் இணைப்பு எண்: 05800812<br>2. மின் இணைப்பு எண்: 0580241249<br>3. மின் இணைப்பு எண்: 0580086<br>4. மின் இணைப்பு எண்: 0580085<br>5. மின் இணைப்பு எண்: 0580087<br>6. மின் இணைப்பு எண்: 0580084<br>7. மின் இணைப்பு எண்: 0580241366<br>மேற்படி மின் இணைப்புகள் 2 மின் மாற்றிகள் (Transformer) மூலம் LT சர்வீஸாக இயங்கி வருகிறது. இதனால் அடிக்கடி மின் அழுத்த வேறுபாடுகள் ஏற்பட்டு மோட்டார்கள் பழுதாகி வருகிறது. தற்போது மோட்டார் இயங்கும் நேரத்தில் சராசரியாக உள்ள 400V க்கு பதிலாக 350 V மட்டுமே உள்ளது. இதன் காரணமாக மோட்டார்கள் போதிய நீரழுத்தம் | அனுமதி வழங்கப்படுகிறது |

இன்றி நீரேற்றும் பணியை செய்து வருவதால் குடிநீர் விநியோகம் மிகவும் பாதிப்படைந்து வருகிறது. ஆகையால் மேற்படி மின் இணைப்புகளை ஒருங்கிணைத்து போதிய மின் அழுத்தம் பெறும் வகையில் புதிதாக HT மின்இணைப்பு பெற வேண்டும் என கேட்டு வரப்பெற்றுள்ள இவ்வலுவலக பொறியியல் பிரிவு மின் பணியாளர் நிலை 1 திரு.த.சரவணன் என்பவரது அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

25.07.2023 | 477

**பொருள் எண் : 7**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய கோடாரங்குளம் தூய நீரேற்று நிலையத்தில் உள்ள 50HP மோட்டார் எண் 1 ன் Foot valve, Sluice valve மற்றும் Non - Return valve ஆகியவற்றை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | வேலை விபரம் | **RR Sekaran Industries** அம்பாசமுத்திரம் | **RR Palani Industries** அம்பாசமுத்திரம் | **Dhanalakshmi Engineering works** அம்பாசமுத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | கோடாரங்குளம் தூய நீரேற்று நிலையத்தில் உள்ள 50HP மோட்டார் எண் 1 ன் 150mm Foot valve, 200 mm Sluice valve மற்றும் Non - Return valve 200mm ஆகியவற்றை பழுது நீக்கம் செய்யும் பணி | ரூ.22420.00 (GST உட்பட) | ரூ.23140.00 (GST உட்பட) | ரூ.23187.00 (GST உட்பட) |

அனுமதி வழங்கப் படுகிறது

25.07.2023 | 478

**பொருள் எண் : 8**

அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய கோடாரங்குளம் தூய நீரேற்று நிலையத்தில் உள்ள 50HP மோட்டார் எண் 1 ன் பம்பு பழுது நீக்கம் செய்யும் பணிக்கு வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ. எண் | வேலை விபரம் | **RR Sekaran Industries** அம்பாசமுத்திரம் | **RR Palani Industries** அம்பாசமுத்திரம் | **Dhanalakshmi Engineering works** அம்பாசமுத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | கோடாரங்குளம் தூய நீரேற்று நிலையத்தில் உள்ள 50HP மோட்டார் எண் 1 ன் பம்பு பழுது நீக்கம் செய்யும் பணி | ரூ.21948.00 (GST உட்பட) | ரூ.23376.00 (GST உட்பட) | ரூ.22762.00 (GST உட்பட) |

அனுமதி வழங்கப் படுகிறது

<table>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>479</td>
<td><u>பொருள் எண் : 9</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய 3 நீரேற்று நிலையங்கள் தாமிரபரணி ஆற்றினை நீராதரமாக கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்போது ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ள காரணத்தினால் நீராதாரங்களை சுற்றி செடி கொடிகள் வளர்ந்து கழிவு பொருட்களும் தேங்கி உள்ளன. அவற்றை கீழ்காணும் இடங்களில் ஹிட்டாச்சி இயந்திரம் மூலம் அகற்றி நீராதாரங்களை சுத்தப்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு<br><br>1. கோடாரங்குளம் இயல்பு நீரேற்று நிலையத்தின் புட் வால்வு அமைந்துள்ள ஆற்றின் கரையோரத்தில் தேங்கி உள்ள மணல் திட்டுகளை அப்புறப்படுத்துதல்.<br>2. ஊர்காடு சுடலை கோவில் நீரேற்று நிலையத்தில் உள்ள 3 உறை கிணறுகளை சுற்றியும் செடி கொடிகளை அப்புறப்படுத்தி கிணற்றை சுற்றி நீரோட்டம் ஏற்படுத்துதல்.<br>3. ஊர்காடு இராமர் கோவில் நீரேற்று நிலையத்தில் உள்ள உறை கிணற்றை சுற்றி செடி கொடிகளை அப்புறப்படுத்தி கிணற்றை சுற்றி நீரோட்டம் ஏற்படுத்துதல்.</td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>480</td>
<td><u>பொருள் எண் : 10</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சி பிரதான சாலை வெற்றி வளைவு (விக்டரி ஆர்ச்) கீழ்புறம் உள்ள நதியுண்ணி கால்வாய் பழைய பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் அமைக்கும் பணிக்காக தற்காலிக பேருந்து நிலையம் கல்லிடைகுறிச்சி சாலை அரோமா பள்ளி முன்பு செயல்பட்டு வந்தது. பேருந்து நிலையம் வந்து செல்லும் பயணிகளின் வசதிக்காக தற்காலிக நிழற்கூடம் அமைத்திட வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலை விபரம்</th><th>யுவன் டெக்கரேஷன் அம்பாசமுத்திரம்</th><th>பழனி பந்தல் கான்ராக்டர் அம்பாசமுத்திரம்</th><th>சண்முகா பந்தல் டெக்கரேஷன் அம்பாசமுத்திரம்</th></tr>
<tr><td>1</td><td>கல்லிடைகுறிச்சி சாலை அரோமா பள்ளி முன்பு செயல்பட்டு வரும் தற்காலிக பேருந்து நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக 60 அடி நீளம் x 20 அடி அகலம் ஓலைப்பந்தல் மூலம் நிழற்கூடம் அமைக்கும் பணி (பாலப்பணிகள் முடிவுறும் வரை வாடகை அடிப்படையில்)</td><td>ரூ.24500.00</td><td>ரூ.25900.00</td><td>ரூ.27000.00</td></tr>
</table></td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>481</td>
<td><u>பொருள் எண் : 11</u><br><br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் கழிவு செய்யப்பட வேண்டிய பொது சுகாதாரம் மற்றும் குடிநீர்பிரிவு வாகனங்களை (Condemnation of Vehicles) ஏலம் விடுதல் தொடர்பான அறிவிப்பினை தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு பில் எண்.3300430505 நாள்.07.07.2023 ன் படி KAL PUBLICATIONS PVT LTD என்ற பெயரில் தொகை ரூ.3931/- வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.</td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>482</td>
<td><u>பொருள் எண் : 12</u><br><br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் கல்லிடைகுறிச்சி - அம்பாசமுத்திரம் புதிய புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்புக்காக தீர்வம் பிறப்பிக்கப்பட்டு நகராட்சிக்குரிய நிலங்களுக்கு இழப்பீட்டு தொகை பெறுவதற்காக அரசு வழக்குரைஞரின் சட்ட கருத்துரு பெற்றமைக்கு அரசு வழக்குரைஞர் திரு.ஆர்.சங்கர் BA.BL அவர்களின் பில் படி ரூ.3000- வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.</td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>483</td>
<td><u>பொருள் எண் : 13</u><br><br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய வணிக வளாக தரைதளம் கடை எண் 7, 14.072023 அன்று ஏலம் விடப்பட்டதில் கலந்து கொண்டவர்களின் ஏலக் கேள்விகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஏலதாரரின் பெயர்</th><th>ஏலதாரர்கள் ஏலக் கேள்வித் தொகை</th></tr>
<tr><td>1.</td><td>திரு. P. சிவசுப்பிரமணியன்<br>NO . 2 H. கம்பர் தெரு<br>ஆசிரியர் காலணி<br>அம்பாசமுத்திரம்.</td><td>ரூ 8150/-</td></tr>
<tr><td>2</td><td>திரு. S. பூதப்பாண்டி<br>S/O சண்முகவேல்<br>6/15 ஏகாம்பரபுரம் காலணி<br>கோடாரங்குளம்<br>அம்பாசமுத்திரம்</td><td>ரூ 8100/-</td></tr>
</table></td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>484</td>
<td><u>பொருள் எண் : 14</u><br><br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் குப்பை இல்லாத நகராட்சியாக (GFC) புதிதாக ‘5’ Twin Bin வாங்குவதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல்<br><br>
<table>
<tr><th rowspan="2">வ. எண்.</th><th rowspan="2">வேலையின் விபரம்</th><th colspan="3">ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளிகள் விபரம்</th></tr>
<tr><th>The Central Government Employees consumer co-operative stores ltd, Chennai - 06</th><th>Sun Enterprises Erode</th><th>Green Enterprises Erode</th></tr>
<tr><td>1</td><td>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு தேவையான ‘5’ Twin Bin வாங்குவது தொடர்பாக</td><td>Twin Bin<br>1ன் விலை<br>ரூ 20750/-</td><td>Twin Bin<br>1ன் விலை<br>ரூ 18500/-</td><td>Twin Bin<br>1ன் விலை<br>ரூ 19500/-</td></tr>
</table></td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>485</td>
<td><u>பொருள் எண் : 15</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கும், துப்புரவு பணிக்கும், தூய்மை நகராட்சியாக மேம்படுத்துவதற்காக தேவையான பொருட்கள் வாங்குவதற்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல்
<table>
<tr><td rowspan="2">வ. எண்.</td><td rowspan="2">வேலையின் விபரம்</td><td colspan="3">விலைப்புள்ளிகள் விபரம்</td></tr>
<tr><td>திருமலை டிரேடர்ஸ், திருநெல் வேலி</td><td>ஸ்ரீ நம்பி கெமிக்கல்ஸ், திருநெல்வே லி</td><td>சக்தி டிரேடர்ஸ், திருநெல் வேலி</td></tr>
<tr><td rowspan="5">1</td><td rowspan="5">அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவு டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கும், துப்புரவு பணிக்கும், தூய்மை நகராட்சியாக மேம்படுத்துவதற்காக தேவையான பொருட்கள் வாங்குவது தொடர்பாக</td><td>பிளீச்சிங் பவுடர் 1கி = ரூ 52</td><td>பிளீச்சிங் பவுடர் 1கி = ரூ 51</td><td>பிளீச்சிங் பவுடர் 1கி = ரூ 49</td></tr>
<tr><td>சுண்ணாம்பு பவுடர் 1கி = ரூ 12</td><td>சுண்ணாம்பு பவுடர் 1கி = ரூ 11.50</td><td>சுண்ணாம்பு பவுடர் 1கி = ரூ 11</td></tr>
<tr><td>மாலத்தியா ன் 1 லி = ரூ 1260</td><td>மாலத்தியான் 1 லி = ரூ 1190</td><td>மாலத்தியா ன் 1 லி = ரூ 1100</td></tr>
<tr><td>கருப்பு பினாயில் 1லி = ரூ 80</td><td>கருப்பு பினாயில் 1லி = ரூ 89</td><td>கருப்பு பினாயில் 1லி = ரூ 68</td></tr>
<tr><td>கலர் பினாயில் 1லி = ரூ 88</td><td>கலர் பினாயில் 1லி = ரூ 90</td><td>கலர் பினாயில் 1லி = ரூ 66</td></tr>
</table>
</td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>486</td>
<td><u>பொருள் எண் : 16</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் செல்லும் நதியுண்ணி கால்வாயில் அமைந்துள்ள கீழ்காணும் 6 பழுதடைந்த பாலங்களுக்கு பதிலாக புதிதாக 6 பாலங்கள் மூலதன மான்ய நிதி (CGF) 2023-24 திட்டத்தில் அமைக்கப்பட இருக்கிறது. அதற்கான மண் பரிசோதனை செய்த வகைக்கு திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் அவர்களின் 03.07.2023 ம் தேதிய பில் படி ரூ.84960- வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>1. 17 வது வார்டு சங்கர் தெரு பாலம்.<br>2. 5 வது வார்டு முடப்பாலம் பாலம்.<br>3. 16 வது வார்டு மேலப்பாளையம் தெரு மயானசாலையில் இருந்து ஆற்றுக்கு செல்லும் பாலம்.<br>4. 12 வது வார்டு சுப்பிரமணியபுரம் டோபிகானா ரோட்டில் உள்ள பாலம்.<br>5. 18 வது வார்டு சோலைபுரம் வடக்கு தெரு பாலம்.<br>6. 18 வது வார்டு அரசு மருத்துவமனை அருகில் உள்ள பாலம்.</td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
<tr>
<td>25.07.<br>2023</td>
<td>487</td>
<td><u>பொருள் எண் : 17</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் மொத்தம் 1627 தெருவிளக்குகள் உள்ளன. இவற்றினை LED விளக்குகளாக வகை மாற்றம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணி உத்திரவு வழங்கப்பட்டும் பணிகளை செயல்படுத்த தேவையான உதிரி பாகங்களுக்கு சோதனைச்சான்று பெருவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் அதற்கான இடைபட்ட காலத்தில் தெருவிளக்குகளை பராமரிப்பு செய்திட கீழ்காணும் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு அனுமதி கேட்டு இவ்வலுவலக பொறியியல் பிரிவு மின்பணியாளர் நிலை 1 திரு.சு.ராஜன் என்பவர் அளித்துள்ள அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.</td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
1. 40w Copper Choke - 100 nos<br>
2. 1/18 SWG Copper Wire - 2 Coil<br>
3. 3/20 SWG Copper Wire - 1 Coil<br>
4. Insulation Tap Roll - 100 Nos<br>
5. 24hrs Timer (Digital Clock) - 20 Nos<br>
6. 35 w CFL Bulb - 15 Nos
</td>
<td></td>
</tr>
<tr>
<td>25.07. 2023</td>
<td>488</td>
<td>
பொருள் எண் : 18<br>
அம்பாசமுத்திரம் நகராட்சி 2021-2022ம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்குகள், திட்டப்பணிகள் மற்றும் திட்ட செலவினங்கள் அனைத்தும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர்களால் தணிக்கை மேற்கொண்டு வரப்பெற்ற தணிக்கை அறிக்கைகளில் வருவாய் நிதி தணிக்கை அறிக்கை 02.02.2023 அன்றும் குடிநீர் நிதி மற்றும் வடிகால் நிதி தணிக்கை அறிக்கை 03.02.2023 அன்றும் வெளியிடப்பட்டுள்ளது. 2021-22 வருவாய் நிதி தணிக்கை அறிக்கையில் பத்தி எண் : 44 மட்டும் தல ஆய்வின் போது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. 2021-22ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் மொத்தம் 73 பத்திகள், நிலுவையில் இருந்து வருகின்றன. உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையினரால் எழுப்பப்பட்டுள்ள தணிக்கை பத்திகள் விபரம் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி விதிகள் 2016 விதி எண் 13(1) ன் பிரகாரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
2021 - 2022ம் ஆண்டுக்கான மொத்தப் பத்திகள் விபரம்
<table>
<tr><th>வ,. எண்</th><th>பத்திகள் விபரம்</th><th>வருவாய் மற்றும் மூலதன நிதி பத்தி எண்கள்</th><th>குடிநீர் வடிகால் நிதி பத்தி எண்கள்</th><th>பெரு மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>சிறப்பு பத்திகள்</td><td>8 (உ, ஊ), 13, 14, 15(அ,ஆ,இ,ஈ,உ), 16(அ,ஆ, இ,ஈ,), 17, 18(அ,ஆ), 19(அ,ஆ), 20(அ,ஆ,இ), 22, 23, 27, 28(அ,ஆ,இ,ஈ) 29,30,31, 32, 33, 34(அ,ஆ), 37, 38(அ,ஆ). 39(அ,ஆ,இ,ஈ,உ,ஊ), 41, 42, 43, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54 மற்றும் 59</td><td>8ஆ, 11, 17, 18</td><td>40</td></tr>
<tr><td>2</td><td>சாதாராண பத்திகள்</td><td>7, 8(ஆ,இ,ஈ) 9, 10, 11, 12, 16(ஈ,உ), 21, 24, 25, 26, 35இ, 40, 55, 56, 57, 58, 60இ,ஈ, 61, 62, 64, 65, 66, 67</td><td>9, 10, 12, 13, 14, 19, 20, 21, 22</td><td>33</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>60</td><td>13</td><td>73</td></tr>
</table>
</td>
<td>பார்வையிட்டு பதிவு செய்யப் படுகிறது</td>
</tr>
<tr>
<td>25.07. 2023</td>
<td>489</td>
<td>
<u>பொருள் எண் : 19</u><br>
அம்பாசமுத்திரம் நகராட்சி 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க. மாரியம்மாள் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br>
1. புதுக்கிராமம் தெரு அங்குவிலாஸ் காம்பவுன்ட் முன்பு இருந்து சுபம் கல்யாண மண்டபம் வரை கான்கிரீட் மூடியுடன் கூடிய கழிவுநீர் ஓடை அமைத்தல்.<br>
2. புதுகிராமம் சேனையர் சிமெண்ட் தெரு (அங்குவிலாஸ் முடுக்கு தெரு) கழிவு நீர் ஓடை மீது கான்கிரீட் முடி அமைத்தல்.
</td>
<td>அனுமதி வழங்கப் படுகிறது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 25.07.<br>2023 | 490 | **<u>பொருள் எண் : 20</u>**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி 21வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ஆ. முத்துகிருஷ்ணன் அவர்கள் அளித்துள்ள கீழ்காணும் பொருள் குறித்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br>1. ஊர்க்காடு தெற்கு காலனியில் உள்ள கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்தல்.<br>2. ஊர்க்காடு தங்கம்மன் கோவில் தெருவில் உள்ள கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்தல்.<br>3. ஊர்க்காடு தங்கம்மன் கோவில் சமுதாய நலக்கூடத்திற்கு புதிதாக கழிப்பிடம் கட்டுதல்<br>4. ஊர்க்காடு தெற்கு காலனியில் புதிதாக கழிவுநீர் ஓடை அமைத்தல். | அனுமதி வழங்கப் படுகிறது |
| 25.07.<br>2023 | 491 | **<u>பொருள் எண் : 21</u>**<br>தமிழ்நாடு அரசின் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதம் ரூ 1000/- வழங்கும் திட்டம் அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் செயல்படுத்துவதற்காக 13 முகாம்கள் தேர்வு செய்யப்பட்டு அதன்மூலம் கணக்கெடுக்கும் பணி நடைபெற உள்ளது. இம்முகாம்களில் மின்சாரம், குடிநீர் வசதி, நிழற்கூடம் மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுத்திட தமிழக அரசின் தலைமை செயலாளர் அவர்கள் காணொளி வாயிலாக அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 13 முகாம்களிலும் மேற்படி அடிப்படை வசதிகள் செய்திடவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதி வழங்கப் படுகிறது |

நகர்மன்ற தலைவர்
அம்பாசமுத்திரம் நகராட்சி.